மாதாந்த மின்னிதழ்

# கவிமுளரி

கவிதைகளின் வாசம்

முளரி–3 | இதழ்–03

மார்ச் | 2025



விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்

# கவிமுளரி®

மாதாந்த மின்னிதழ்

கவிதைகளின் வாசகம்

கார்த்திகை : 2023

ISSN 3021-6680

Kavi Mulari Magazine



**வெளியிடுவோர் :**

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம், பேத்தாழை, வாழைச்சேனை.

**பதிவு இல:** EP/CUL/BAT/VAL/03/69/2023



**இதழாசிரியர் :**

ஓவியர் மரகதம் பிரகாஷ்

**இணையாசிரியர் :**

கவிஞர், அதிபர், திருமதி.விஜிதா முருகவேள்

**ஆசிரியர் குழு :**

கவிஞர் நவநிதன்

கவிஞர் பிள்ளைக்கவி பிரசாந்

கவிஞர் தமிழூராள் அனுஷ்திக்கா

கவிஞர் தமிழ்மகள் அனுசதுர்த்திக்கா

கவிஞர், இளஞ்சைவப்புலவர் சிவநந்தினி

கவிஞர், இளஞ்சைவப்புலவர் ஜிதர்சினி

கவிஞர் தமிழ்ப்புதல்வன் யேசுசகாயம்

**செவ்விதாக்குநர் :**

கவிஞர், இளஞ்சைவப்புலவர் த.கி.ஷர்மிதன்

**அட்டை வடிவமைப்பு :**

கவிஞர், இளஞ்சைவப்புலவர் த.கி.ஷர்மிதன்

**அட்டைப் படம் :**

இணையம்

**ஆலோசகர்கள் :**

எழுத்தாளர் ஜிஃப்ரி ஹாசன்

கலாநிதி மணிக்கூகவி நஸீரா எஸ் ஆப்தீன்

கவிஞர், கலாபூசணம் முத்துமாதவன்

எழுத்தாளர், கலாபூசணம் மெத்தியேஸ்


## புதிய ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

படைப்புகளை அனுப்புவோர் கவனிக்க வேண்டியவை :

- கவிதைகள் மட்டுமே அனுப்பலாம்.
- ஒருங்குறியில் (Unicode font) தட்டச்சு செய்து அனுப்ப வேண்டும்.
- படைப்பாளர், படைப்பின் கீழ் தமிழில் பெயரையும் வசிப்பிடத்தையும் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்.
- ஆக்கம் தனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்தல் அவசியம்.
- ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதிக்குள் ஆக்கங்கள் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- ஒருவர் எத்தனை ஆக்கங்களும் அனுப்பலாம்.
- ஆக்கங்கள் அடுத்தடுத்த இதழ்களில் பிரசுரிக்கப்படும்.
- மின்னஞ்சலுக்கு அனுப்பப்படும் ஆக்கங்களே இதழுக்கு ஏற்கப்படும்.

. . . . . . . . . . . . . . . . . . .

### ஆக்கங்களை அனுப்ப


editor2023kavimulari@gmail.com


வாசிப்பு அனுபவத்திற்கு நுழையுங்கள்...

https://www.facebook.com/profile.php?id=61552005633300

https://facebook.com/groups/818237263429433/

https://kavimulari.blogspot.com


படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பாவர். இதழாசிரியர் பொறுப்பல்ல.
ஆக்கங்களைச் செவ்விதாக்கம் செய்வதற்கு ஆசிரியர் குழுவிற்கு உரிமையுண்டு.


"எழுதுகோல் புரட்சி
எங்ஙனும் எழும்பட்டும்
விறுதென விடுதலை
சமூகத்தில் நிலைக்கட்டும்"


படங்களுக்காய் நன்றி நவில்கிறோம் : Google மற்றும் முகநூல்

**நற்கவிகளுக்கு**

**வணக்கம்,**

வாழைச்சேனை பேத்தாழையைத் தளமாகக் கொண்டு இயங்கும் விபுலானந்தர் கலை இலக்கிய மன்றத்தின் முயற்சியாகக் 'கவிமுளரி' எனும் கவிதைசார் மின்னிதழ் வெளிவருகிறது.

பிரதேச கவிஞர்களுக்குக் களம் கொடுப்பதும் அவர்களின் எழுத்தாக்க முயற்சிகளுக்குக் கரம் கொடுப்பதும் எமது பிரதான அவா.

தொடர்ந்து வெளிவந்த இதழ்களுக்கு நீங்கள் வழங்கிய ஆதரவிற்கு மேலான நன்றி. தொடர்ந்தும் ஆதரவளிப்பீர்கள் என நம்புகின்றோம்.

இதழில் பங்குபெறும்
கவிஞர்கள் யாவர்க்கும்
வாழ்த்துகள்.

சிலரது கவிதைகள் இடம்பெறாமல் போயிருக்கலாம். அவர்களது கவிதைகள் தொடர்ந்து வரும் இதழ்களில் நிச்சயம் வெளிவரும்.

தொடர்ந்தும் உங்கள்
பேராதரவை வேண்டும்,




உங்கள்,
-இதழாசிரியர்

*2025.03.25*

# முளரியின் இதழ்களில்...

- மட்டூர்க்கவி இரா.நிதன்
- வளர்கவி க.யுவக்ஷனா
- சோபி
- தமிழாதினி கிந்துயா
- வளர்கவி வாழையூர் அபி
- கவித்தோழி யோ.சிவநந்தினி
- நந்தினி கௌரி
- சிவன் மகன்
- கவிஞர் இர்ஷாத்
- விவேகவெளி தமிழேந்திரன்
- இ.ஜிவிஷா




# -தமிழ்த்தாய் வாழ்த்து-

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகுஞ்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலுந் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோ லனைத்துலகு மின்பமுற
எத்திசையும் புகழ்மணக்க விருந்தபெருந் தமிழணங்கே, (௧)

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் னிருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்குங் கவின்மலையாளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே யொன்றுபல வாயிடினும்
ஆரியம்போ லுலகவழக் கழிந்தொழிந்துசிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே. (௨)

~மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை.

# பாராட்டுங்கள்

காலத்தை வென்றவரை
யாரும் அறிந்ததுண்டா?
இருந்தாலும்,
காலத்தை மாற்ற
நினைப்பவரைக் கொஞ்சம்
பாராட்டுங்கள்
புன்னகையோடு...

முயற்சி செய்து
வென்றவரைப்
பாராட்டுங்கள்
மாறாக
முயற்சியின் விளிம்பில்
தோற்றவரை
இன்னும் அதிகமாகப்
பாராட்டுங்கள்...

சிறந்த
கேள்விகள் கேட்டால்
பாராட்டுங்கள்
உங்கள் மனதுக்கு
உகந்த பதில்கள்
கிடைத்தாலும்
மறக்காது பாராட்டுங்கள்...

உதவி செய்தால்
உண்மையாகப்
பாராட்டுங்கள்
உதவியின்றிக்
கிடப்பாரைக் கண்டு
யாரும் உதவிட வந்தால்
உரிமையோடு
பாராட்டுங்கள்...

தகுந்த இடங்களில்
பாராட்டுங்கள்
உங்கள்
தகுதியை உயர்த்த
ஒருபோதும்
தவறியும்
பாராட்ட நினைக்காதீர்கள்...

நல்லவற்றைப்
பாராட்டுங்கள்
நம்பிக்கையைப்
பாராட்டுங்கள்
நலம்விசாரித்துப்
பாராட்டுங்கள்
நாளும் பாராட்டிக்
கொண்டே இருங்கள்...

***

-மட்டூர்க்கவி இரா.நிதன்,
இலங்கை.

# யன்னல் ஓர இருக்கை

விடை தெரியாத பயணத்திலே
அத்தனை வினாக்களுக்கும் மத்தியில்
தன்னைத்தானே ஆசுவாசப்படுத்தி
புறப்படுகிறாள் விரைந்து
பரபரப்பின் உச்சத்திலும்
தன்னை அழகுபடுத்தியவளாய்
விரைந்து கொள்கிறாள்

பிரச்சினைகளைக் கடந்தவளாய்
புன்முறுவலுடன்
தனது பயணப்பையை எடுத்தவளாய்
கடக்கிறாள் வீதியை
தனக்கான ஆதரவாய்
தன் ஆறுதலை
கண்டுகொள்ள

விரைந்து சென்றவளுக்கு
தூயகாற்றின் அரவணைப்பினை
அள்ளித்தெளித்து
கட்டியணைத்துக்கொள்ள
தயார் ஆகுகிறது
அவளோடு பயணிக்கும்
அவளது யன்னல் ஓர இருக்கை

தன்னைத்தானே ஆசுவாசப்படுத்தும்
அப்பயணத்திலே
இறங்கும் பாதைவரை
எண்ணற்ற சிந்தனைகளோடு
அவளைத் தேற்றுபவளாய்
உடன் இருக்கிறது
அவளது யன்னல் ஓர இருக்கை.

***

-வளர்கவி க.யுவக்ஷனா,
தாழையூர்.

# பெருவாழ்வு

வேறென்ன பெரு வாழ்வு
வாழ்ந்து விடப் போகிறேன்

அந்தியில் சற்றுநேரம்
வானம் பார்க்காமல்,
இரவில் ஜன்னல் வழி
நட்சத்திரம் இரசிக்காமல்,
பயணமொன்றின் போது
பிடித்த பாடலினைக் கேளாமல்,
பிடித்தவர்களோடு தேநீர் இடைவெளியை
பகிர்ந்து கொள்ளாமல்,
என் இரகசிய கணங்களை
ஓர் நாட்குறிப்பில்
பத்திரப்படுத்தி வைக்காமல்,
என்னைப்பற்றிய சங்கதிகளையெல்லாம்
ஒருவரிடம்கூட பகிர்ந்து கொள்ளாமல்,
என் கரம் பற்றி கதை பேசுபவர்களுக்கு
கடைசி நம்பிக்கை தந்துவிடாமல்,

வேறென்ன பெருவாழ்வு
வாழ்ந்துவிடப் போகிறேன்...

***

-சோபி

# காரிருளின் இளவரசி

இனிக்கும் இசையின் இராகமானவளே!
இரவில் ஒளிவீசும் தீபமானவளே!
பால்முகம் கொண்ட பாவையானவளே!
பார்த்ததும் மனம் மயக்கிடும் மகத்தானவளே!

பிள்ளைக்குச் சோறூட்ட வந்த அன்னையாய்
என் திண்ணைக்கு வந்து என்னை அழைப்பதேனடி..?
காதோரம் ஏதோ இசைப்பதும் ஏனடி...?

மாலை வரும் வேளை துயில் எழுபவளே!
மனக்கவலை தீர்க்க மருந்தானவளே !
இத்தரணி வாழ வானமெனும் விதை நிலத்தில்
வித்தாக வந்தவளே!
மழை வரும் வேளைகண்டு
மறைந்தாடும் திருமகளே!
தொட்டுவிடாத் தூரத்தில் நீ சென்றதேனடி?
உன் திருஒளிப் பார்வையதைப்
பட்டுவிடாது மறைப்பதும் ஏனடி?

கவிதையின் பேரழகு அதைக் காணச் செய்து
உவமையின் உண்மையதை உணரச் செய்து
உத்தம உதயத்தால் உலகம் காத்து
நித்தமும் நிலைமாறாது வித்தைகள் பலவும் செய்து
காரிருளுடன் களித்துறவாடும் இளவரசியே!
உனைக் கண்டு கொள்ளத்
தவிக்கிறதே என் விழியே...!

***

-தமிழாதினி கிந்துயா,
கிண்ணையூர்.

# பல வண்ண மகள்

தோற்றத்தில் புதுப்பொலிவாய்
மத்தியதனில் தை முதல்
இளவேனில் ஈறாக
பூத்துக் கிடக்கிறாள்.

மஞ்சள் நிறத்தினை,
மனம் மணந்து கொள்ளும்
மாநிறத்தவள் இளஞ்சிவந்த
இளங்காரிகையவளை

மொத்தப் பார்வையையும்
பறித்திடச் செய்திடும்
காரிகையவள்
ஏக்கப்பார்வை அத்தனையும்
ஏகாந்தரமாய் கொண்டிருப்பவள்

நேற்று மறைந்த காதல்
இன்று உன்னிடத்தில் புதியதாய் உணர்கிறேன்
தோற்றத்தில் புதுப்பொலிவாய்
பல வண்ண மகளாய்
மலர்ந்து கிடக்கும் உன்னிடம்.

***

- வளர்கவி
வாழையூர் அபி

## மின்னல்

கொட்டித் தீர்க்கும் மாமழையின்
கருமையை
சற்று வெட்டிச் செல்கிறது
மின்னல்.

## கவிதை

சொல்லைக் கிளறி முள்ளை மீட்டு
பிள்ளைத் தமிழின் எழிலைக் கூட்டிடும்
ஒற்றை நொடியில் உதித்த
ஓர் கவிதை.

## வாடகை வீடு

நட்டு வச்ச செடிகளில்
சிட்டுக் குருவிகள் வந்தமரும்
போதெல்லாம்
மாற்றம் தேடச் சொல்லி விடுகிறது
வாடகை வீடு.

## பனித்துளி

இலைகளின் பரப்பிலும்
புற்களின் நுனியிலும்
கதிர் அம்புகளால் மரணிக்கின்றன
பனித்துளிகள்.

## AI

மனித அறிவாற்றலால் உருப்பெற்ற
விஞ்ஞான வித்தையாளன்
மனித சிந்தனையை மழுங்கடிக்கிறான்
AI தொழினுட்பம்.

-கவித்தோழி யோ.சிவநந்தினி,
வாழைச்சேனை.

# கனவுகளான நினைவுகள்

மணல் வீதி
நின்ற இடமெல்லாம் மரநிழல்
சேவல் கூவுமுன் எழும் மாந்தர்
“யாதும் ஊரே யாவரும் கேளிர்”
என்ற கூற்று மெய்ப்பட வாழ்ந்த உறவுகள்
மாலையில் விளையாட்டுத் திடலில் ஒன்றுகூடல்
இரவில் வலையும் அத்தாங்குமாய்
அப்பா, அண்ணாமாரின் ஊர்வலம்
கதை சொல்லும் அம்மம்மா
செல்லம் கொஞ்சும் மாமாமார்
சிறு வியாதியேனும் ஊரே சேரும் பாசம்
கடலலையின் ஓசை சங்கீதமாகியது
உப்புக் காற்றும் தென்றலாகியது
ஓலைக் குடிசையினுள்...
ஆனால்,
சிறு வயது வாழ்க்கை நினைவுகள்
கனவாய்ப் போயின கல்வீட்டினுள்.

***

-நந்தினி கௌரி
பாசிக்குடா.

# சிதறிவிடாதீர்!

ஓர் மணியில் உதித்த
ஆயிரம் கண்மணிகளுள்
நானும் ஒருத்தன்...
என் பிறப்பை எண்ணி
கண்கள் கசிந்துருகி
கார்மழையென கரை ஒதுங்குகிறேன்...

பெண்ணியம் பேசிய முண்டாசுக் கவியும்
கண்ணியமாய்க் கவிபாடும் கம்பனும்
என்இயம் பேசாமல் போனதை எண்ணி
ஏரிக்கரையில் நின்று ஏங்குகிறேன் இன்று...

பசுமண்ணை இயந்திரம் கொண்டுழுது
மண் ஈரம் காயமுன்னே மன்னவனோ
அவன் கைப்பையில் இருந்தெடுத்து – எனை
கச்சிதமாய் விசிறியும் விட்டான்...

விசிறிய மறுநாள் எம்மாயிரம் பேரில்
புள்ளினமும் மண்ணினமும் சிலரை
மாயமாக்கி மறைத்துவிட்டன தம்பசிக்காய்
அவையும் பாவம் வாழத்தானே வேண்டும்.

மாய்ந்தபின் எஞ்சிய சிலரில் எங்களை
கங்கையும் கழுவிச்சென்றிட வந்துவிட்டாள்
வந்தவள் வடிவாய் வாய்திறந்து
வாரியள்ளிட்டாள் அதில் சிலரை....

இன்னமும் இருக்கின்றது போல் நம்ஆயுள்
இன்னவர், என்னவர் ஓர் சிலரும் கூச்சலிட
குதூகலமாய் எட்டிப்பார்த்தேன் பூமியில்
பூத்துக்குலுங்கிக் காய்த்திடவே....

காய்த்தபின் புதுவண்ணம் நான் வாங்கி
புத்துணர்வும் புத்துயிரும் பெற்ற வேளையிலே
குருகுகளும் தம்பசிக்காய் இன்னும் சிலரை
இங்கிதமாய் எடுத்துச்சென்றிடவே....

கதிரவனின் கண்விழியின் பார்வையிலே
கலகலக்கும் ஓசையுடன் கதிராய் மாறிடவே
கடகட ஓசை எந்திரத்தில் மாட்டிவிடாது
கட்டப்பட்டேன் ஓர் சாக்குதனில் செந்நிறமாய்

அந்நிறம் மாறாமல் மன்னவன் மனைவந்து
மனைவி கையால் மண்ணகற்றி என்னை
மண்ணடுப்பில் அன்னமாய் மாற்றிவிட்டாள்
அக்குழந்தைச் செல்வங்களின் பசியகற்ற

பசிபோக்கும் பாசத்தோடு நானும் செல்ல
போதும் என நினைத்தவரும்
புறந்தள்ளிவிட்டனர் புற்றரையினிலே
இன்னமும் இருக்கிறேன் என்னுயிரைப் பிடித்தபடி
இதற்கும் ஏங்கும் ஏழைக்காய்..

தென்னவரே ! மன்னவரே ! கூறுவது கேளும்
நான் வந்த வழிதனிலே நீரும் சென்றால்,
கண்ணியமாய்க் காத்திடுவீர்
கதிர்மணியாம் எங்களைக் காலச்சக்கரத்தில்...

***

**-சிவன் மகன்,**
**கிரான்.**

# ...கஸல்...

எனக்குள் தூங்கிய
மௌனங்களின்
மர்மங்களை
அவிழ்க்கிறது
மரணம்
நீ
மரணமாக வா
வாழ்வுக்கு
சமாதி கட்டுவோம்.

நான் மரத்தில்
காய்ந்து விழும்
நிழல்
நீ
என்னை அசைக்கும்
பறவை.

மரணம் என்னில்
ஜனிக்கட்டும்
உன்னை அடைதல்
மரணம்.

நீ
என்னைப் பார்த்தும்
பார்க்காமல் போகிறாய்
நானோ
உன்னைப் பார்த்து
என் கனவுகளை
ஒளியூட்டுகிறேன்.

உன்
நினைவுகளை
ஆடையாக
உடுத்திக் கொண்டதால்
நான்
அழுக்காவதில்லை
விரைந்து வா
பூக்கள் அவிழ்த்து வைத்த
புன்னகைகளை
ஆடைகளாக
கட்டிக்கொள்வோம்.

***

-கவிஞர் இர்ஷாத்,
வாழைச்சேனை.

# புத்தகங்களோடு போராடு

புத்தகங்களோடு நித்தமும்
போராட்டம் நடத்து!
பகுத்தறிவாளியே – உந்தன்
திறமையைக் காட்டு!
சித்த இருளெல்லாம்
செகம் விட்டுத் துரத்து!
சிகரத்தை நோக்கியே
பாதங்களை நிமிர்த்து!
***

அறியாமையே உனது
ஆயுட்சிறை விலங்கு!
அறிவுதரும் பனுவல்களே
ஆயுட்கால விளக்கு!
நெறிமுறை அனைத்தும்
நேர்கோட்டுப் பயணம்!
நல்வழியதிலே நடத்தட்டுமே
நானிலத்தில் நயனம்!
***

வாழ்க்கை போராட்டமே
வாழ்வியம் சொல்கிறதே!
வீழ்கை நரகமே
வைராக்கியம் மொழிகிறதே!
ஏழ்பிறப்பிலும் உன்னோடு
எழுகதிராய்வரும் படிப்பே!
எழவைக்கும் கல்வியே
இருதயத் துடிப்பே!
***

கண்டதுண்டமாய் உடையதீ
கண்ணாடித் துண்டல்லவே!
கண்டதே காட்சியென்றால்
கொண்டதே கோலமென்றால்
கண்முன்னே ஒளிருமா
கலங்கரை தீபம்?
உன்முன்னே உன்வசந்தம்
உன்வாசிப்பால் புதுச்சுகந்தம்!
***

நாவிலும் நரம்பிலும்
நற்கல்வியை ஏற்று!
நாறவைக்கும் நடத்தைகளை
நறுமணமாக மாற்று!
பூவிலும் புல்லிலும்கூடப்
புரட்சியைக் காணு!
பாலும் தேனும் போல்
புலமையைப் பேணு!
***

புத்தகங்களோடு நித்தமும்
பூமியில் போராடு!
புனிதமான போராட்டம்
அதுவென்று தேரினையோட்டு!
இரத்தம் சிந்தாமலே
இப்படியொரு போராட்டமுண்டா?
எழுதிப்போடு
புத்தகப் போராட்டம்
புத்துலகைப் படைத்ததென்று!!
***

-விவேகவெளி தமிழேந்திரன்,
கிழக்கு மாகாணம்.

# ஏழைவீட்டு இளவரசி

ஏழை வீட்டு இளவரசி – அவள்
வீட்டில் பணம் இல்லாவிட்டாலும்
பசி அறிந்ததில்லை

பிடித்தவை ஆயிரம் இருக்கும்
ஆனால்,
அடம்பிடித்தது இல்லை
அவள்

பள்ளிப்படிப்பை பக்குவமாய்
முடித்து
பல்கலைக்கழகப் படிப்பை
தொடங்கிய அவளுக்கு
பலகாரங்கள் செய்து கொடுக்க
மறந்ததில்லை அம்மா

“பிடித்த உணவை செய்துவை” என
அம்மாவை மிரட்டும் அப்பா
அவளுக்கு
பாசச் சண்டைக்கு என
இரண்டு தம்பிகள்;
தம்பிகள் இல்லை அண்ணன்கள்

பல்கலைக்கழக விடுமுறைக்காய்
காத்திருக்கும் குடும்பம்
பாசத்திற்கு அளவில்லை
ஏழையாக இருந்தாலும்
ஏழ்மையைக் கண்டிராத
ஏழைவீட்டு இளவரசி
அவள்.

–இ.ஜிவிஷா,
கிழக்குப்பல்கலைக்கழகம்.

***

கவிமுளரி



# -தமிழ்மொழி வாழ்த்து-

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!

வான மளந்த தனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!

ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!

எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
என்றென்றும் வாழிய வே!

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
துலங்குக வையக மே!

தொல்லை வினை தரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ்நா டே!

வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
வாழ்க தமிழ்மொழி யே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!

-சுப்பிரமணிய பாரதியார்.



சொல்லால்
செல்லை
அசைப்பது
கவிதை.

-காரிருளன்.

9773021668009

ISSN 3021-6680 Kavi Mulari Magazine

விபுலானந்தர் கலை இலக்கிய மன்றம்
பேத்தாழை

KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari
KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari KaviMulari